**O.S.No.131/2020**

**PW1 : ஜெகதீசன்** தேதி 27.10.2025

**வாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 3ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

2ம் பிரதிவாதி ஹாஜகானுக்கு நான் ரூ. 7 லட்சம் கொடுத்து விட்டேன். அவ்வாறு ரூ.7 லட்சம் கொடுத்ததற்கான வங்கி ஆவணம் ஏதாவது உள்ளதா என்றால் இல்லை ரசீது கொடுத்துள்ளார். இந்த வழக்கில் கிரைய தொகை ரூ.7 லட்சம். ரூ.7 லட்சம் ஹாஜகானுக்கு எப்போது கொடுக்கப்பட்டது என்றால் முதலில் 16.8.2011 ல் ரூ.2 லட்சம் கொடுத்தேன். 25.8.2012 ல் மீதி ரூ.5 லட்சத்தை கொடுத்தேன். மேற்படி தொகை கொடுத்த பிறகு கிரையம் செய்து கொடுக்கும் படி அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். ஹாஜகானிடம் கிரையம் செய்து கொடுக்கும்படி கேட்டேன். அதற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால தாக்கல் செய்திருக்கிறேன். ஹாஜகான் பவர் ஏஜென்ட் என்ற முறையில் தான் அக்ரிமென்ட் போட்டு கொடுத்தார். ஹாஜகானுக்கு கொடுக்கப்பட்ட பவர் பத்திரம் ரத்து செய்யப்பட்டது என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தத்தில் கால கெடு 1 வருடம் வைக்கப்பட்டது. தாவாவானது ஒப்பந்த கெடுவிற்குள் தாக்கல் செய்யாமல் அதற்கு பின்னிட்டு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். காலதாமதமாக தாக்கல் செய்து விட்டேன் என்றால் சரியல்ல. என்னுடைய கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில் அ.வ.எண் 400/19 வழக்கில் 3ம் பிரதிவாதி எதிர் வழக்காடுகிறார் என்றால் சரிதான். நான் சொல்வது போல் வஞ்சக கூட்டாக அடமானம் எதுவும் எழுதிகொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கு பொய்யான வழக்கு என்றும் 2ம்

பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.